2017 மார்ச் 21]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், வாய்ப்பு தருகிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் அடிப்படையிலே ஏறக்குறைய 25 பிரச்சினைகளை நாங்கள் உங்களிடத்தில் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வழங்கியிருக்கிறோம். குறிப்பாக, NEET தேர்வு, சேலத்தைச் சார்ந்த மாணவர் முத்துகிருஷ்ணனுடைய தற்கொலை, நெடுவாசல் பகுதியில் ஹைட்ரோ கார்பன் பிரச்சினையின் காரணமாக நடைபெறக்கூடிய போராட்டம், குடிநீர்ப் பிரச்சினை, இதுபோன்ற பல பிரச்சினைகள் குறித்து வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும், மூன்று நாட்கள்தான் சட்டமன்றக் கூட்டத்தொடர் இருக்கிறது. எனவே, தயைகூர்ந்து இரண்டு, மூன்று முக்கியமான கவன ஈர்ப்புத் தீர்மானங்களையாவது எடுத்து, இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில் நீங்கள் அனுமதி தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற அந்தக் கோரிக்கை குறித்து காலையிலேயே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசியிருக்கிறேன். சில கோரிக்கைகளை நாளையதினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்று ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. விரைவாக எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக. . .(குறுக்கீடு) முடிகிற கோரிக்கைகளை நிச்சயம் நான் எடுத்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் மைக் தருவதற்கு முன்பே, நீங்களாகவே எழுந்து நின்று பேசிக்கொண்டிருந்தால் எப்படி? உட்காருங்கள்.*

[*2017 மார்ச் 21*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஆகியவற்றை நாங்கள் வழங்கியிருக்கிறோம். அவற்றின் முக்கியத்துவம் கருதி, நீங்கள் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெடுவாசல் பிரச்சினையெல்லாம் மிக மிக முக்கியமான. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன என்று இப்போதுதான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டதற்கு பதில் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) நான் பேசியிருக்கிறேன். நாளை முடிந்தவரையிலும் எடுத்துக்கொள்கிறேன். அதையே* raise *செய்ய வேண்டாம். இப்போது, அவர் சொன்ன கோரிக்கைகளை எல்லாம், மாண்புமிகு முதலமைச்சரோடும், மற்ற அமைச்சர்களோடும் விவாதித்திருக்கிறேன். இன்னும் இரண்டு, மூன்று நாட்கள் இருக்கின்றன; உறுதியாக எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறேன்.*

திரு. கரி. இராமசாமி: *சேலம் உருக்காலையினுடைய நிலை குறித்தும் நாங்கள் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறோம். சேலத்திலே இருக்கக்கூடிய அந்தத் தொழிற்சாலை கைமாறும் நிலையில் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து இன்று காலையில்தான் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) இருங்கள், நீங்கள் காலை 9–40 மணிக்கு கொண்டுவந்து கொடுத்தீர்கள். அதற்குள்ளே, அதைப்பற்றி நீங்கள் இங்கே* raise *செய்தால், நான் எப்படி அனுமதிக்க முடியும்? இப்போதுதானே, கொடுத்திருக்கிறீர்கள்? அதுகுறித்து, பதிலைப் பெறுவதற்காக அனுப்பியிருக்கிறோம்; பதில் வந்த உடனே, நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன் அவர்கள்.*

முற்பகல் 11–10

***திரு. உ. மதிவாணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினை வறட்சி மாநிலமாக அறிவித்தபிறகு, தமிழ்நாட்டில் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டு,. . .*

2017 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன விஷயமோ, அதை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள். நீங்கள் கவன ஈர்ப்பு அறிவிப்பில் என்ன சொல்லியிருக்கிறீர்களோ, அதை மட்டும் கேளுங்கள், அதற்கு அமைச்சர் உங்களுக்குப் பதில் சொல்வார். (குறுக்கீடு)

திரு. உ. மதிவாணன்: அதைத்தான் சொல்லப்போகிறேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை. வறட்சி நிவாரணம் அளிப்பதற்கு இரண்டு ஹெக்டேர் நிலத்திற்கு மட்டும் நிவாரணம் வழங்கப்படும் என்று அரசு அறிவித்து நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய விதிமுறைகள் ஒருபுறம் இருந்தாலும்கூட, 2009–2010–ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், தலைவர் கலைஞர் அவர்கள், ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில், பாதிக்கப்பட்டிருந்த அனைத்து நிலங்களுக்கும், அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கினார்கள். எனவே, இந்த அரசு அதைக் கருத்தில்கொண்டு, விதிமுறைகள் எப்படி இருந்தாலும்கூட, விவசாயிகளினுடைய நிலை கருதி, அனைத்து விவசாயிகளுக்கும், பாதிக்கப்பட்ட அனைத்து விவசாய நிலங்களுக்கும் நிவாரணம் வழங்கிட வேண்டுமென்ற கோரிக்கையோடு, 178 கோடி ரூபாய். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள், உட்காருங்கள்.

திரு. உ. மதிவாணன்: இருங்கள், ஒரு நிமிடம். சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) அதை விவாதத்தில் எடுத்துக்கொள்ளும்போது, முழு விவரத்துடன் பேசுவதற்கு உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

3. கவன ஈர்ப்பு

குழந்தைகளுக்கு தட்டம்மை–ரூபெல்லா தடுப்பூசி போடும் திட்டத்தை முழுமையாக அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள்